அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# விளக்கு வழிபாட்டு மலர்

## வள்ளலார் மகளிர் மாடத்தினர்

மாதப்பூசம் தோறும்

நிகழ்த்தும் விளக்கு வழிபாட்டிற்காக

வெளியிடப்பெற்றது.

வெளியீடு :

வள்ளலார் பெருநெறிப்பதிப்பகம்

வள்ளலார் அறநிலையம் - பெண்ணாடம்

E-mail: vallalararanilayampdm@yahoo.com

Website: www.vallalarpennadam.com

வெளியீட்டு எண் : 11 / 2016

## விளக்கின் விளக்கம்:

விளக்கு என்பது தமிழில் ஒரு காரணப் பெயர். மற்றப் பொருட்களை ‘இது இன்னது’ என்று எது விளக்கிக் காட்டுகிறதோ அது விளக்கு என்று வழங்கப்படுகிறது. இருள் சூழ்ந்த வேளையில் விளக்குதான் மற்றப் பொருட்களை நமக்கு காட்டி விளக்குகிறது. அந்த விளக்கு அணைந்து விட்டால், உடனே இருள் வந்து சூழப்பார்க்கும். இதனைத்தான் “விளக்கு அற்றம் பார்க்கும் இருளே போல்” என்பார் வள்ளுவப் பெருந்தகை. அற்றம் என்றால் இங்கே அணைந்து போதலைக் குறிக்கும்.

## திருமந்திரத்தில் விளக்கு:

மற்றப் பொருட்களை இருளில் விளக்கிக் காட்டும் பொருளை விளக்கு என வழங்குதலை அறிகிறோம். இங்கே ஒரு உண்மையை உணர்தல் வேண்டும். பகல் வேளையில் விளக்கு எதையும் விளக்கிக் காட்ட வேண்டுவதில்லை. ஆனாலும் பகலிலும் அதை விளக்கு என்றுதான் வழங்குகிறோம். விளக்கு என்பது ஒரு ஒளிப்பொருள். ஒளியை வழங்கக் கூடிய ஒருபொருள் எனவே தான், விளக்கை ஒரு ஆன்மீகப் பொருளாக உருவகித்தார்கள் நம் தமிழ்ச் சான்றோர்கள். விளக்கைப் பற்றி திருமந்திரம் இவ்வாறு கூறுகிறது :

**“விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்;**

**விளக்கின் முன்னே வேதனை மாறும்;**

**விளக்கை விளக்கும் விளக்கு உடையார்கள்,**

**விளக்கில் விளங்கும் விளக்கு அவர் தாமே”.**

என்பதே அந்த திருமந்திரப் பாடல்.

இங்கே முதல் வரியில், விளக்கினை அதாவது நம் புருவ மத்தியில் உள்ள அருள் விளக்கை ஏற்றி, சிவப்பரம்பொருள் வெளியை அறியுமாறு அறிவுறுத்துகிறார். அவ்வாறு ஏற்றப்பட்ட அருள் விளக்குக்கு முன்னால், நம் வேதனைகள் அத்தனையும் போய்விடும் என்கிறார் இரண்டாவது அடியில். அந்த அகஒளியான அகவிளக்கைக் கண்ட அவர்களே, ஒளிவிளக்காகத் திகழ்வார்கள் என்பது பின் அடிகளில் வரும் அவர் அருள்வாக்கு. நம்முள் இருக்கும் விளக்கு, நாம் அறிந்தாலும் அறியாவிட்டாலும் நம்முள் இருக்கத்தான் செய்கிறது. இதை ஏற்றச் சொல்கிறார் திருமூலர். இங்கே ஏற்றுவது என்பது, தீப்பெட்டிக் கொண்டு ஏற்றுவது இல்லை. இங்கே ஏற்றுவது என்பது தூண்டி, தூக்கி விடுவது என்று பொருள். ஆகையினால்தான், ஒளியை வழங்க ஆயத்த நிலையில் உள்ள விளக்கு இரவோ, பகலோ, அது விளக்கு என்றே வழங்கப் படுகிறது. ஏற்றிவிட, அதாவது, தூண்டிவிட வேண்டியதுதான் நம் கடன்.

**தேவாரத்தில் விளக்கு:**

சைவப் பெருந்தகை அப்பர் அடிகள், தேவாரத்தில் விளக்குக்கு ஒரு அருமையான விளக்கம் கொடுக்கிறார்கள்.

**“உடம்பெனும் மனை அகத்துள்**
**உள்ளமே தகளி ஆக,**
**மடம்படும் உணர்நெய் அட்டி,**
**உயிர் எனும் திரிமயக்கி,**
**இடம்படு ஞானத் தீயால்**
**எரிகொள் இருந்து நோக்கில்**
**கடம்பமர் காளை தாதை**
**கழலடி காண லாமே”**

என்று விளக்குக்கு ஒரு அழகான உருவகம் கொடுக்கிறார் நாவுக்கு அரசர். இங்கே உடம்புதான் வீடு; உள்ளம்தான் அகல் விளக்கு; நம் உணர்வுகள்தான் அதில் ஊற்றப்படும் நெய். நம் உயிர் என்னும் திரி அதில் ஒளிர்கிறது; இந்த ஒளியில் நோக்கினால், இந்த உடம்புக்குள்ளேயே இறைவனைக் காணலாம் என்கிறார். என்ன அருமையான உருவகம் பாருங்கள்!

**திருவருட்பாவில் விளக்கு:**

அகல் விளக்கு என்னும் ஒளிக்கும் வள்ளற்பெருமானுக்கும் உள்ளத் தொடர்பை இவ்வையகமே அறியும். இருள் தேகமாக இருக்கும் இன்றைய நம் உடலை, அருள் தேகமாக அதாவது ஒளித் தேகமாக மாற்றுவதே வள்ளற் பெருமானின் வாழ்வியலாகும். வள்ளற்பெருமான் அருட்பாவின் உரைநடைப் பகுதியில் தீபத்தை பற்றி சொல்வதை இரண்டு நிலையில் சொல்லாம்.

முதலாவது

தீபப் பிரமாணம் - இது சன்மார்க்கத்திற்குள் முதன்முறையாக வரும் அன்பர்கள் சிந்திக்கக் கூடியது அல்ல. பெருமானின் தத்துவங்களில் வேர்நிலை, முதல் நிலை, இடைநிலை ஆகிய நிலைகளைத் தாண்டி மேல்நிலையில் சிந்திக்க வேண்டுதாகும்.

இரண்டாவது

தேக நீடிப்பதற்கான தீபப் பிரமாணம் அதாவது தீப விளக்கம். இதை சிறிது இங்கே சிந்திக்கலாம்.

பெருமான் அகல் விளக்கை இவ்வாறு உருவகிக்கிறார்கள்

மண் அகல்விளக்கு – மனித உடல் (தேகம்).

எண்ணெய் – இரத்தம்

திரி – சுக்கிலம் (அ) சுரோணிதம்

பிரகாசம் – ஆன்மா

இங்கே, திரியை (சுக்கிலத்தை) தூண்ட தூண்ட, எண்ணெய் (இரத்தம்) விரைவாக வற்றிப்போகும். இறுதியில் தீபம் ஒளியற்று முடியும். விந்து விட்டான் நொந்து கெட்டான் என்ற சொல்வழக்கு இந்த அளவில் வந்ததே. இங்கே, விந்து என்பது சுக்கிலமாகும். இது விரிக்கில் பெருகும். எனவே, இடம் கருதி இத்தோடு இந்த உருவகத்தை நிறைவு செய்கிறோம்.

**வள்ளற்பெருமானும் தீபமும்:**

நம் வழிபாட்டில் உருவம் ஏன் வந்தது?

சதா சர்வகாலமும் ஓடிக் கொண்டே இருக்கிற மனதை, ஓடாமல் நிற்கச் செய்யவே, ஒரு உருவத்தை உருவகித்து நம் வழிபாட்டை செய்கிறோம். நம் ஆலய உருவங்கள் இந்த அடிப்படையில் தோன்றியவைகள்தான்.

ஆனால், எந்த உருவத்தில் இறைவனைக் கண்டு வழிபட்டாலும், இறைவன் இருப்பது ஒளிவடிவில்தான் என்பதை உணர்த்தவே, இறுதியாக கற்பூர ஒளியோடு நிறைவு செய்கிறோம். எனவேதான், நமது வழிபாட்டில் விளக்கு என்னும் ஒளிப்பொருள் இன்றிமையாததாய் இருக்கிறது. மற்ற உருவ வழிபாடுகள், 'சரியை' என்றால், விளக்கு ஆராதனை 'ஞான சரியை' ஆகிறது. எனவேதான் வள்ளற்பெருமான் தன் உடலை ஒளி உடலாக மாற்றி நம் ஊனக் கண்களிலிருந்து மறையும் முன்னால், மேட்டுக்குப்பத்தில் தான் வழிபாடு செய்து வந்த அகல் விளக்கை அறைக்கு வெளியே அன்பர்களிடத்தில் விடுத்து, "இனி கொஞ்சகாலம் எல்லோரும் **ஆண்டவர் இப்போது தீப முன்னிலையில் விளங்குகிற படியால்** உங்களுடைய காலத்தை வீணிற் கழிக்காமல் "நினைந்து, நினைந்து" என்னும் தொடக்கமுடைய 28 பாசுரங்களை அடங்கிய (ஞானசரியை) பாடலிற் கண்டுள்ளபடி தெய்வ பாவனையை **இத்தீபத்திற்** செய்யுங்கள். நான் இப்போது இந்த உடம்பில் இருக்கிறேன் இனி எல்லா உடம்பிலும் புகுந்து கொள்வேன்" என்று திருவாய் மலர்ந்தருளினார்கள். இது நிகழ்ந்தது ஸ்ரீமுக ஆண்டு கார்த்திகை மாதம் ஆகும். எனவே, தீப முன்னிலையில் தெய்வம் இருப்பதாக பாவித்து அத்திருவிளக்கை மலர் தூவி ஆராதிக்க வேண்டும்.

“விளக்கிட்டார் பேறு சொல்லின், மெய்ந்நெறி ஞானமாகும்” என்பார் திருநாவுக்கரசர். ஒரு குடும்பத்தில், ஒரு பெண் மேற்கொள்ளும் நன்னெறி, அக்குடும்பம் முழுமைக்கும் போய்ச்சேர்கிறது. எனவே மகளிர் இவ்விளக்கு வழிபாட்டை நிகழ்த்துவது, ஒட்டுமொத்தக் குடும்பமே நிகழ்த்துவதாகும். ஒரு குடும்பத்திற்கு மருமகளாக வரும் பெண்ணை, “விளக்கு ஏற்ற வந்தவள்” என்ற சொல்வழக்கு வந்தது. அவள் குடும்ப விளக்காகவே கருதப்படுகிறார்கள்.

**அறநிலையத்தில் விளக்கு வழிபாடு :**

வள்ளற்பெருமான் அகல்விளக்கு வழிபாட்டை நம்மைப் போன்ற, பயிற்சியாளர்களுக்காகவே அளித்ததை, உள்வாங்கி, பெண்ணாடம் வள்ளலார் அறநிலைய வளாகத்தில், ‘சிற்சபா மாடம்’ என்ற ஒளிக்கோயிலை நிறுவி, அதில் கடந்த 26 ஆண்டுகளாக அணையா தீபமொன்றை பராமரித்து வருகிறார்கள். இந்த திருவிளக்கு முன்னால், அறநிலையத்தின் குழந்தைகளும், முதியோர்களும் காலை, மாலை இருவேளையும் வழிபாடு செய்து வருகிறார்கள். அறநிலையத்தில் வசிக்கிற குழந்தைகளுக்கும், முதியொர்களுக்கும் உணவு வழங்கி உயிர்ப்பணி செய்கிற தயவாளர்களின் நல்வாழ்விற்காகவும் இங்கேதான் வழிபாடு செய்கிறார்கள்.

திருவிளக்குதான் அறநிலையத்தின் கருவறை தெய்வம், இந்த தெய்வத்தின் முன்னால் செய்யப்படுகிற வழிபாட்டினால் அறநிலையத்திற்கு உண்டிகொடுக்கும் அத்தனை தயவாளர்களின் வாழ்க்கையும் வளம்பெறுகிறது என்பது எல்லொரின் நம்பிக்கையாக இருக்கிறது.

இந்த சிற்சபா மாடத்தில், வள்ளலார் மகளிர் மாடத்துப் பெண்டிற்கள், ஒவ்வொரு மாதப் பூசந்தோறும், மாலையில் திருவிளக்கு வழிபாடு நிகழ்த்துகிறார்கள். இவ்வட்டாரப் பெண்களே அல்லாமல் மற்றப் பெண்டிர்களும் இவ்விளக்கு வழிபாட்டில் கலந்துகொண்டு ஆன்ம நெகிழ்ச்சிப் பெற பிரார்த்திக்கிறோம். வாழ்வில் பன்னலமும் பெற மாதர்குல மாணிக்கங்களை வருக என வரவேற்கிறோம்.

விளக்கினைத் தொழுவோம் !

ஒளிவிளக்காக எழுவோம் !!

**இங்ஙனம்,**

**வள்ளலார் அறநிலையத்தார்,**

**பெண்ணாடம்.**

# விளக்கு வழிபாடு

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருஅருட் பிரகாச வள்ளலார் திவ்விய திருவடிகளே
சரணம் சரணம்
சற்குருநாதா சற்குருநாதா சன்மார்க்க சங்கம் தழைக்க
அருள் தா தா
எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க
வள்ளல் மலரடி வாழ்க வாழ்க

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

## இறை வணக்கம்

திருவிளங்கச் சிவயோக சித்திஎலாம் விளங்கச்
சிவஞான நிலைவிளங்கச் சிவானுபவம் விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே
திருக்கூத்து விளங்க **ஒளி சிறந்ததிரு விளக்கே**
உருவிளங்க உயிர்விளங்க உணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்க அருள் உதவுபெருந் தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்தொருபால் விளங்க
வயங்குமணிப் பொதுவிளங்க வளர்ந்தசிவக் கொழுந்தே

அருளாளர் வருகின்ற தருணம் இது தோழி
**ஆயிரம் ஆயிரம் கோடி அணி விளக்கு ஏற்றிடுக**
தெருளாய பசு நெய்யே விடுக மற்றை நெய்யேல்
திருமேனிக்கு ஒரு மாசு செய்தாலும் செய்யும்
இருளேது காலை விளக்கேற்றிட வேண்டுவதோ
என்னாதே மங்கலமாய் ஏற்றுதலாம் கண்டாய்
மருளேல் அங்கவர் மேனி விளக்கமது எண்கடந்த
மதி கதிர் செங்கனல் விரவி என்னினும் சாலாதே !

"திருநிலைத்து நல் அருளோடும் அன்போடும்
சிறப்போடும் செழித்து ஓங்க
உருநிலைத்து இவண் மகிழ்வோடு வாழ்வுற
உவந்து நின் அருள் செய்வாய்
இரு நிலத்தவர் இன்புறத் திருவருள்
இயல்வடி வோடு மன்றில்
குரு நிலைத்த சற்குரு எனும் இறைவ நின்
குரைகழல் பதம் போற்றி"

**அருள்விளக்கே அருட்சுடரே** அருட்ஜோதிச் சிவமே
அருளமுதே அருள் நிறைவே அருள் வடிவப் பொருளே
இருள் கடிந்தென் உளமுழுதும் இடங்கொண்ட பதியே
என் அறிவே என் உயிரே எனக்கினிய உறவே
மருள் கடிந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே
மன்றில் நடம் புரிகின்ற மணவாளா எனக்கே
தெருளளித்தத் திருவாளா ஞான உருவாளா
தெய்வ நடத் தரசே நான் செய் மொழி ஏற்றருளே

**பொய்யனேன்** பிழைகள் எல்லாம் பொறுத்திடல் வேண்டும் போற்றி
கையனேன் தன்னை இன்னும் காத்திடல் வேண்டும் போற்றி
மெய்யனே மெய்யர் உள்ளம் மேவிய விளைவே போற்றி
ஐயனே அப்பனே எம் அரசே போற்றி போற்றி

**வேதமும்** கலைகள் யாவும் விளம்பிய புலவ போற்றி
நாதமும் கடந்து நின்ற நாத நின் கருணை போற்றி
போதமும் பொருளும் ஆகும் புனித நின் பாதம் போற்றி
ஆதரம் ஆகி என்னுள் அமர்ந்த என் அரசே போற்றி

**விண்ணுறு சுடரே என்னுள் விளங்கிய விளக்கே** போற்றி
கண்ணுறு மணியே என்னைக் கலந்த நற்களிப்பே போற்றி
பண்ணுறு பயனே என்னைப் பணிவித்த மணியே போற்றி
எண்ணுறும் அடியார் தங்கட் கினியே தெள்ளமுதே போற்றி

## அருட்பெருஞ்ஜோதி அகவல் திரட்டு :

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
அருட்சிவ நெறிசார் அருட்பெரு நிலைவாழ்
அருட்சிவ பதியாம் அருட்பெருஞ்ஜோதி
ஆகம முடிமேல் ஆரண முடிமேல்
ஆகநின்று ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி
இகநிலைப் பொருளாய்ப் பரநிலைப் பொருளாய்
அகமறப்பொருந்திய அருட்பெருஞ்ஜோதி

ஈனம்இன் றிகபரத்து இரண்டின்மேற் பொருளாய்
ஆனலின்றோங்கிய அருட்பெருஞ்ஜோதி
உரைமனங் கடந்த ஒருபெரு வெளிமேல்
அரைசு செய்து ஓங்கும் அருட்பெருஞ்ஜோதி
ஊக்கமும் உணர்ச்சியும் ஒளிதரும் ஆக்கையும்
ஆக்கமும் அருளிய அருட்பெருஞ்ஜோதி
எல்லையில் பிறப்பெனும் இருங்கடல் கடத்தி என்
அல்லலை நீக்கிய அருட்பெருஞ்ஜோதி

ஏறா நிலைமிசை ஏற்றி என்றனக்கே
ஆறாறு காட்டிய அருட்பெருஞ்ஜோதி
ஐயமும் திரிபும் அறுத்து எனது உடம்பினுள்
ஐயமும் நீக்கிய அருட்பெருஞ்ஜோதி
ஒன்றெ‌ன இரண்டென ஒன்றிரண்டென இவை
அன்றென விளங்கிய அருட்பெருஞ்ஜோதி
ஓதாது உணர்ந்திட ஒளி அளித்து எனக்கே
ஆதாரமாகிய அருட்பெருஞ்ஜோதி

ஔவியம் ஆதி ஓர் ஆறுந் தவிர்த்தபேர்
அவ்வியல் வழுத்தும் அருட்பெருஞ்ஜோதி
திருநிலைத் தனிவெளி சிவவெளி எனும் ஓர்
அருள்வெளிப் பதிவளர் அருட்பெருஞ்ஜோதி
சுத்த சன்மார்க்கச் சுகத்தனி வெளிஎனும்
அத்தகைச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
சுத்த மெய்ஞ்ஞான சுகோதய வெளிஎனும்
அத்து விதச்சபை அருட்பெருஞ்சோதி

தூய கலாந்த சுகந்தரு வெளி எனும்
ஆய சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி
ஞானயோகாந்த நடத்திரு வெளிஎனும்
ஆனியில் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
விமலபோ தாந்தமா மெய்ப்பொருள் வெளிஎனும்
அமல சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி
பெரிய நாதாந்தப் பெருநிலை வெளிஎனும்
அரிய சிற்றம்பலத்து அருட்பெருஞ்ஜோதி

சுத்த வேதாந்த துரியமேல் வெளிஎனும்
அத்தகு சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
சுத்த சிந்தாந்த சுகப்பெரு வெளிஎனும்
அத்தனிச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
தகரமெய்ஞ் ஞானத் தனிப்பெரு வெளியெனும்
அகர நிலைப்பதி அருட்பெருஞ்ஜோதி
தத்துவா தீதத் தனிப்பொருள் வெளிஎனும்
அத்திரு அம்பலத்து அருட்பெருஞ்ஜோதி

சச்சிதானந்தத் தனிப்பர வெளிஎனும்
அச்சியல் அம்பலத்து அருட்பெருஞ்ஜோதி
சாகாக் கலைநிலை தழைத்திடு வெளி எனும்
ஆகாயத் தொளிர் அருட்பெருஞ்ஜோதி
காரண காரியங் காட்டிடு வெளி எனும்
ஆரணச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
ஏகம் அனேகம் எனப்பகர் வெளி எனும்
ஆகமச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி

வேதாகமங்களின் விளைவுகட்கு எல்லாம்
ஆதாரமாம் சபை அருட்பெருஞ்ஜோதி
என்று ஆதிய சுடர்க்கு இயல் நிலையாய் அது
அன்றாம் திருச்சபை அருட்பெருஞ்ஜோதி
சமயம் கடந்த தனிப்பொருள் வெளியாய்
அமையும் திருச்சபை அருட்பெருஞ்ஜோதி
முச்சுடர் களும்ஒளி முயங்குற அளித்தருள்
அச்சுடராம் சபை அருட்பெருஞ்ஜோதி

துரியமுங் கடந்த சுக பூரணந்தரும்
அரிய சிற்றம்பலத்து அருட்பெருஞ்ஜோதி
எவ்வகைச் சுகங்களும் இனிதுற அளித்தருள்
அவ்வகைச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
இயற்கை உண்மையதாய் இயற்கையின்பமுமாம்
அயர்ப்பிலாச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
பரமுடன் அபரம் பகர்நிலை இவையெனத்
திறமுற அருளிய திருவருட் குருவே

மதிநிலை இரவியின் வளர்நிலை அனலின்
திதிநிலை அனைத்தும் தெரித்த சற்குருவே
கணநிலை அவற்றின் கருநிலை அனைத்தும்
குணமுறத் தெரித்து உட்குலவு சற்குருவே
பதிநிலை பசுநிலை பாசநிலை எலாம்
மதியுறத் தெரித்து உள் வயங்கு சற்குருவே
பிரம ரகசியம் பேசி என் னுளத்தே
தரமுற விளங்கும் சாந்த சற்குருவே

பரம ரகசியம் பகர்ந்து என துளத்தே
வரமுற வளர்த்து வயங்கு சற்குருவே
சிவரகசியம் எலாம் தெரிவித்து எனக்கே
நவநிலை காட்டிய ஞான சற்குருவே
சத்தியல் அனைத்தும் சித்தியல் முழுவதம்
அத்தகை தெரித்த அருட்சிவ குருவே
அறிபவை எல்லாம் அறிவித்து என்னுள்ளே
பிறிவற விளங்கும் பெரிய சற்குருவே

கேட்பவை எல்லாம் கேட்பித்து என்னுள்ளே
வேட்கையின் விளங்கும் விமல சற்குருவே
காண்பவை எல்லாம் காட்டுவித்து எனக்கே
மாண்பதம் அளித்து வயங்கு சற்குருவே
செய்பவை எல்லாம் செய்வித்து எனக்கே
உய்பவை அளித்தெனுள் ஓங்கு சற்குருவே
உண்பவை எல்லாம் உண்ணுவித்து என்னுள்
பண்பினில் விளங்கும் பரம சற்குருவே

சத்திய மாம்சிவ சித்திகள் அனைத்தையும்
மெய்த்தகை அளித்தெனுள் விளங்குசற்குருவே
எல்லா நிலைகளும் ஏற்றிச் சித்தெலாம்
வல்லான் எனவெனை வைத்த சற்குருவே !
சீருற அருளாம் தேசுற அழியாப்
பேருற என்னைப் பெற்ற நற்றாயே
பொருந்திய அருட்பெரும் போகமே உறுகெனப்
பெருந்தயவால் எனைப் பெற்ற நற்றாயே

ஆன்ற சன்மார்க்கம் அணிபெற எனைத்தான்
ஈன்றமுது அளித்த இனிய நற்றாயே
பசித்திடு தோறும் என்பால் அணைந்து அருளால்
வசித்தமுது அருள்புரி வாய்மை நற்றாயே !
தளர்ந்ததோ றடியேன் சார்பணைந் தென்னை
உளந்தெளி வித்த ஒருமை நற்றாயே
அருளமு தேமுதல் ஐவகை அமுதமும்
தெருளுற எனக்கருள் செல்வ நற்றாயே

இயலமு தேமுதல் எழுவகை அமுதமும்
உயலுற எனக்கருள் செல்வ நற்றாயே
நண்புறும் எண்வகை நவவகை அமுதமும்
பண்புற எனக்கருள் பண்புடைத்தாயே
மற்றுள அமுத வகையெலாம் எனக்கே
உற்றுணவு அளித்தருள் ஓங்கு நற்றாயே !
கலக்கமும் அச்சமம் கடிந்து என துளத்தே
அலக்கணும் தவிர்த்தருள் அன்புடைத்தாயே

துய்ப்பினி லனைத்தும் சுகம்பெற அளித்தெனக்கு
எய்ப்பெலாம் தவிர்த்த இன்புடைத்தாயே
சித்திகளெல்லாம் தெளிந்திட எனக்கே
சத்தியை அளித்த தயவுடைத்தாயே
சத்தினி பாதந் தனையளித்து எனைமேல்
வைத்தமு தளித்த மரபுடைத்தாயே
சக்தி சத்தர்கள் எலாம் சார்ந்தெனது ஏவல்செய்
சித்தியை அளித்த தெய்வ நற்றாயே

தன்னிகர் இல்லாத் தலைவனைக் காட்டியே
என்னை மேலேற்றிய இனிய நற்றாயே !
வெளிப்பட விரும்பிய விளைவெலாம் எனக்கே
அளித்தளித்து இன்புசெய் அன்புடைத் தாயே
எண்அகத் தொடுபுறத்து என்னை எஞ் ஞான்றும்
கண்ணெனக் காக்கும் கருணை நற்றாயே
இன்னருள் அமுதளித்து இறவாத் திறல்புரித்து
என்னை வளர்த்திடும் இன்புடைத்தாயே

தெரியா வகையால் சிறியேன் தளர்ந்திடத்
தரியாது அணைத்த தயவுடைத்தாயே
சினமுதல் அனைத்தையும் தீர்த்தெனை நனவினும்
கனவினும் பிரியாக் கருணை நற்றாயே
தூக்கமும் சோம்பும் என் துன்பமும் அச்சமும்
ஏக்கமும் நீக்கிய என் தனித்தாயே !
அருளொளி விளங்கிட ஆணவம் எனும் ஓர்
இருளற என்னுளத்து ஏற்றிய விளக்கே

துன்புறு தத்துவத் துரிசெலாம் நீக்கிநல்
இன்புற என்னுளத்து ஏற்றி விளக்கே
மயலற அழியா வாழ்வு மேல்மேலும்
இயலுற என்னுளத்து ஏற்றிய விளக்கே
இடுவெளி அனைத்தும் இயலொளி விளங்கிட
நடுவெளி நடுவே நாட்டிய விளக்கே
கருவெளி அனைத்தும் கதிரொளி விளங்கிட
உருவெளி நடுவே ஒளிர்தரு விளக்கே

தேற்றிய வேதத் திருமுடி விளங்கிட
ஏற்றிய ஞான இயலொளி விளக்கே
ஆகம முடிமேல் அருளொளி விளங்கிட
வேகமது அறவே விளங்கொளி விளக்கே
ஆரியர் வழுத்திய அருள் நிலை அனாதி
காரியம் விளக்கும் ஓர் காரண விளக்கே !
வெம்மல இரவது விடிதரு ணந்தனில்
செம்மையில் உதித்துளம் திகழ்ந்த

திரையெலாம் தவிர்த்துச் செவ்வி உற்று ஆங்கே
வரையெலாம் விளங்க வயங்கு செஞ்சுடரே
அலகிலாத் தலைவர்கள் அரசு செய் தத்துவ
உலகெலாம் விளங்க ஓங்கு செஞ்சுடரே
முன்னுற மலவிருள் முழுவதும் நீக்கியே
என்னுள வரைமேல் எழுந்த செஞ்சுடரே
ஆதியும் நடுவுடன் அந்தமும் கடந்த
ஜோதியாய் என்னுளம் சூழ்ந்த மெய்சுடரே

உள்ளொளி ஓங்கிட உயிரொளி விளங்கிட
வெள்ளொளி காட்டிய மெய்யருட் கனலே
நலங்கொளப் புரிந்திடு ஞானயா கத்திடை
வலஞ்சுழித்து எழுந்து வளர்ந்த மெய்க் கனலே
வேதமும் ஆகம விரிவும் பரம்பர
நாதமும் கடந்த ஞானமெய்க் கனலே
எண்ணிய எண்ணிய எல்லாம்தர எனுள்
நண்ணிய புண்ணிய ஞானமெய்க் கனலே

வலமுறு சுத்தசன் மார்க்க நிலைபெறு
நலமெலாம் அளித்த ஞானமெய்க் கனலே
இரவோடு பகலிலா இயல்பொது நடமிடு
பரம வேதாந்தப் பரம்பரம் சுடரே
வரம்நிறை பொதுவிடை வளர்ந்திடு நடம்புரி
பரமசித்த தாந்தப் பதிபரஞ் சுடரே
சமரச சத்தியச் சபையில் நடம்புரி
சமரச சத்தியத் தற்சுயஞ் சுடரே

வெல்கநின் பேரருள் வெல்கநின் பெருஞ்சீர்
அல்கலின் றோங்கிய அருட்பெருஞ்ஜோதி
உலகுயிர்த் திரளெலாம் ஒளிநெறி பெற்றிட
இலகும் ஐந்தொழிலையும் யான் செயத் தந்தனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி
மூவரும் தேவரும் முத்தரும் சித்தரும்
யாவரும் பெற்றிடா இயல் எனக் களித்தனை

போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி
சித்திகள் அனைத்தையும் தெளிவித்து எனக்கே
சத்திய நிலைதனை தயவினில் தந்தனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி
உலகினில் உயிர்களுக்கு உறும் இடையூ றெலாம்
விலகநீ அடைந்து விலக்குக மகிழ்க
சுத்த சன்மார்க்கச் சுகநிலை பெறுக
உத்தமன் ஆகுக ஓங்குக என்றனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

## அருட்பெருஞ்ஜோதி அட்டகம் :

அருட்பெரு வெளியில் அருட்பெரு உலகத்
தருட்பெருந் தலத்துமேல் நிலையில்
அருட்பெரும் பீடத் தருட்பெரு வடிவில்
அருட்பெருந் திருவிலே அமர்ந்த
அருட்பெரும் பதியே அருட்பெரு நிதியே
அருட்பெருஞ் சித்திஎன் அமுதே
அருட்பெருங் களிப்பே அருட்பெருஞ் சுகமே
அருட்பெருஞ் ஜோதி என் அரசே

## ஜோதி வழிபாடு :

ஜோதி ஜோதி ஜோதி சுயஞ்
ஜோதி ஜோதி ஜோதி பரஞ்
ஜோதி ஜோதி ஜோதி அருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்

வாமஜோதி சோமஜோதி வானஜோதி ஞானஜோதி
மாகஜோதி யோகஜோதி வாதஜோதி நாதஜோதி
ஏமஜோதி வியோமஜோதி ஏறுஜோதி வீறுஜோதி
ஏகஜோதி ஏகஜோதி ஏகஜோதி ஏகஜோதி
ஆதிநீதி வேதனே ஆடல்நீடு பாதனே
வாதிஞான போதனே வாழ்க வாழ்கநாதனே.

## உலக நல வாழ்த்து :

வாழிஎன் ஆண்டவன், வாழிஎங்
கோன்அருள், வாய்மை என்றும்
வாழி, எம் மான்புகழ் வாழி, என்
நாதன் மலர்ப்பதங்கள்
வாழி, மெய்ச் சுத்தசன் மார்க்கப்
பெருநெறி மாண்புகொண்டு
வாழிஇவ் வையமும் வானகமும்
மற்றவும் வாழியவே.

# வெள்ளிவிழாக் கண்டு பொன்விழவை நோக்கி பயணிக்கும்




# வள்ளலார் அறநிலையம்

பெண்ணாடம்


அச்சிட்டோர் :

**ஸ்ரீ முருகன் மல்டி கலர் பிரிண்டிங்**

பெண்ணாடம்